
# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

## தொகுதி – IV




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் சி. மகாலட்சுமி

முனைவர் க. பழனிவேல்

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சி. மகாலட்சுமி**<br>**முனைவர் க. பழனிவேல்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2015 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476/1 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | VIII + 1629 - 2078 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 80800 - 61 - 5**


# International Conference on Elements of Arts and Human Values in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. C. Mahalakshmi, Dr. K. Palanivel** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2015 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | VIII + 1629 - 2078 |
| Prize | : | **Rs. 350/-** |

# பொருளடக்கம்


341. **ம. விவேக் பிரபு** 1629
வைரமுத்துவின் ஆயிரம் பாடல்களில் கலைப் பதிவுகள்

342. **முனைவர் மா. சுஜாதா** 1634
கம்பனில் தவத்தின் மேன்மை

343. **முனைவர் போ. சத்தியமூர்த்தி** 1638
சங்க இலக்கியங்களில் பண்டைத்தமிழரின் கட்டடக்கலை

344. **முனைவர் பா. உமாராணி** 1644
சிறுபொறி பெருந்தீ - புறநானூறு

345. **முனைவர் இ. சேனாவரையன்** 1648
சைவமும் மானுட விழுமியங்களும்

346. **முனைவர் மு. கருணாநிதி** 1653
செவ்வியல் இலக்கியங்களில் கட்டடக்
கலைசார் கைவினைக்கலைகள்

347. **முனைவர் கோ. பொற்கலை** 1659
செவ்வியல் இலக்கியங்களில் ஓவியக்கலைகள்

348. **ஆர். சுப்புலட்சுமி** 1665
உழைப்பால் உயர்ந்த ஹாலாந்து மக்கள்

349. **Dr. R. Shantha kumari** 1670
Depiction of Human Values in Bernard Malamud's
novel *The Assistant*

350. **முனைவர் வ. ஜெயா** 1674
அர்த்தமுள்ள இந்து மதம் காட்டும் வாழ்வியல்
நெறிமுறைகள்

351. **முனைவர் வேல். கார்த்திகேயன்** 1680
தமிழ் உணர்வும் தமிழர் மொழியும்

352. **முனைவர் த. விஸ்வநாதன்** 1685
தற்காலக் கவிதைகளில் குழந்தைகள் உலகம்

353. **ஜி. மாடசாமி ஜோதிடர்** 1690
செவ்வாய் தோஷம்... சந்தோஷம்..

354. **ஆ. இராஜேஸ்வரி** 1695
கவிஞர் சுகிர்தராணி படைப்புகளில் மானுட
விழுமியங்களும் கலைக்கூறுகளும்

355. **முனைவர் பூ.மு. அன்புசிவா** 1701
சங்க இலக்கிய நற்றிணையில் தொன்மங்களும்
மானிடவியலும்

# 341. வைரமுத்துவின் ஆயிரம் பாடல்களில் கலைப் பதிவுகள்

**ம. விவேக் பிரபு**
முனைவர் பட்ட ஆய்வாளர்
கணிதவியல் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

காலந்தோறும் மாற்றம் பெறுகின்ற மனித வாழ்க்கை முறைக்கு ஏற்ப அதனைச் சுவையுடையதாக்கும் கலையின் வடிவமும் மாறுபடுகின்றது. இன்றைய நவீன வாழ்க்கைச் சூழலில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் ஒருங்கே பெற்ற கலையாய்த் திரைப்படம் திகழ்கிறது. அன்று தொட்டு இன்று வரை வெளிவரும் பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்கள் அகம் சார்ந்தவை என்றாலும் பல நேரங்களில் அதன் தலைவன் சங்க காலத் தலைவனைப் போலவே கலைத்திறன் கொண்டவனாய்த் திகழ்கிறான்.

கவிஞர் வைரமுத்துவின் "ஆயிரம் பாடல்கள்" என்னும் தொகுப்பில் தனிப்பாடல்கள் மற்றும் சின்னத்திரைப் பாடல்கள் நீங்கலாக 370 திரைப்படங்களின் 945 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் 10 விழுக்காடு, அதாவது 37 திரைப்படங்களின் பாடல்களில் கலைக்கூறுகள் காணப்படுகின்றன. அவற்றைக் கலை வாரியாகப் பிரித்துத் தொகுப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இசையும் காதலும்

இசையமைப்பாளராக வாய்ப்புத் தேடியலையும் இளைஞனுக்குள் காதல் அரும்பினால் ஏற்படும் விளைவும் இசையாகவே இருக்கும் என்பதற்கு "எண்ணி இருந்தது ஈடேற" என்னும் பாடலில் இடம்பெற்றுள்ள பின்வரும் வரிகள் சான்றாகின்றன.

*"மெட்டிச் சத்தம் மெட்டுச் சந்தம் - அது*
*சுரஞ்சொல்லித் தரும் நீ பாட"(படம்: அந்த 7 நாட்கள்)*

இசையே அன்பின் அடிநாதம் என்பதை,

*"நீ என்பதை பொல்லாத நான் என்பதை*
*ஒன்றாக்கி நாம் செய்வது பாடல்தான்"*
*(படம்: தசாவதாரம்)*
*"எங்கள் கானங்கள் கேட்டுக் காதல் செய்க"*
*"இசை வந்த திசை பார்த்து மனம் குழைந்தேன்"*
*(படம்: டூயட்)*